3rd April 1965]

திரு. வை. சங்கரன் : பொதுவாக நம்முடைய இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தொழில்களில் குறிப்பாக ஃபௌண்ட்ரிகளுக்கு, கோக் பிக் ஐயேரன் போன்றவை போதிய அளவு கிடைக்காததால், ஃபௌண்டரிகள் பெரும் அளவுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இது சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொண்டு இருக்கிறார்களா ? இல்லையென்றால் இனியாவது எடுப்பார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த நிலை இருக்கிறது என்றுதான் முதலிலேயே சொன்னேன்.

அரசாங்கப் போக்குவரத்து இலாகாவின் பணியாட்களுக்கு ஊக்க போனஸ்

* 423 கேள்வி.—**திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கப் பஸ் போக்குவரத்து இலாகாவில் பழுது பார்க்கும் டிப்போக்களில் உள்ள மெக்கானிக்குகளுக்கு "ஊக்க போனஸ்" கொடுக்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A paper[a] is placed on the Table of the House.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மண்வளப் பரிசோதனை நிலையம்

* 424. கேள்வி.—**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவு உற்பத்தியைப் பெருக்க மாவட்டந்தோறும் "மண்வளப் பரிசோதனை நிலையம்" அமைக்க உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) அவசியமான யந்திர சாதனங்கள் கிடைத்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மண்வள ஆய்வுக்கூடம் ஒன்றை ஏற்படுத்த முடியும். இச் சாதனங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுவதில்லை. எனவே, அவற்றை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது.

(*a*) & (*b*) If necessary equipment becomes available it will be possible to set up one Soil Testing Laboratory in each district. The equipment has to be imported as it is not indigenously manufactured.

---

[a] Printed as Appendix II on pages 160–164 infra.